**பெயர்– முருகன்**

**தந்தை பெயர்–ஆயிப்பிள்ளை**

**நாள்– 13.03.2024**

**OS NO. 491/2001**

**பி.வா.சா.1 குறுக்கு விசாரணை :**

வாதி தங்கம்மாள் எங்கள் யாதவ சங்கத்தின் பேரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது எனது வழக்கறிஞர் படித்து தெரிவித்தார். இந்த வழக்கில் ஜெயலட்சுமி என்பவர் 3ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். ஜெயலட்சுமி வாதி தங்கம்மாளுக்கு நாத்தனார் உறவாவார். தங்கம்மாள் தற்போது உயிருடன் இல்லை. தங்கம்மாளின் வாரிசுகள் தான் இந்த வழக்கினை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். தங்கம்மாள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 4 ல் 1 பாகம் வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல்செய்துள்ளார். வாதி 2 மனைகளை கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 4ல் 2 பாகம் வாதிக்கு சேரவேண்டும் என்றால் சரிதான். தாவா சொத்தின் கீழண்டை பக்கம் ஜெயலட்சுமி மனை உள்ளது. அந்த மனையில் ஜெயலட்சுமி தற்போது வழக்கு தாக்கல் செய்த பின்பு வீடு கட்டியுள்ளார். ஜெயலட்சுமியின் மேலண்டை பக்கம் வாதி தங்கம்மாளின் இரண்டு மனை உள்ளது என்றால் சரிதான். தங்கம்மாளின் இரண்டு மனைக்கு மேலண்டை பக்கம் எங்கள் யாதவ சங்கத்தின் மனை என்றால் சரிதான். எங்களுடைய மனைக்கு மேலண்டை பக்கம் மேலண்டை தெரு என்றால் சரிதான். கிழக்கு பக்கம் பிராமணர் தெரு என்றால் சரிதான். தென்னண்டை பக்கம் மணிமுத்து மனை உள்ளது. வடக்கு பக்கம் கமாள தெரு உள்ளது. இந்த 4 எல்லைக்குள் தான் தாவா சொத்து அடங்கியுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் முத்து முனிய செட்டியாருக்கு சொந்தமாகும். முத்து முனிய செட்டியார் 10.02.1992 ல் சூரிய செட்டியார், ஆறுமுகம், தூயமணி, பச்சையப்ப செட்டியார் ஆகியோர் நான்கு பேரும் சமமாக அடைய வேண்டியது என்று உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் சரிதான். அந்த உயில் படி தான் முத்து முனிய செட்டியார் கிரயம் கொடுத்தார் என்றால பட்டா கிடைத்த பின்பு தான் கிரயம் செய்து கொடுத்தார். அந்த உயிலின் படி சூரிய செட்டியாருக்கு D ஷெடியூலும், ஆறுமுகத்திற்கு I ஷெடியூலும், தூய

மணிக்கு H ஷெடியூலும், பச்சையப்ப செட்டியாருக்கு E ஷெடியூலும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்படி தான் சூரிய செட்டியாரிடமிருந்து ஜெயலட்சுமி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். மேற்கண்ட உயிலின் படி ஆறுமுகம் மற்றும் தூய மணி ஆகியோர் தங்கம்மாளுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். நான் பச்சையப்ப செட்டியாரிடமிருந்து E ஷெடியூல் கிரயம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். யாதவ சங்கம் எந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் 1996-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டது. எனது சங்கத்தின் நோக்கம் மற்றும் உப விதிகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என்னை யார் தலைவராக தேர்ந்தெடுத்தது என்றால் யாதவ பொது மக்கள் யாதவ சங்கத்தின் தலைவராக என்னை தேர்ந்தெடுத்தார்கள். தற்போது வரை அந்த சொத்து என் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ராஜபிள்ளை செயலாளர் என்ற முறையில் இந்த வழக்கை நடத்தினார் என்றால் சரியல்ல. நான் கொஞ்ச காலம் வெளியூர் சென்றிருந்த போது வழக்கை கவனித்தார். தாவா சொத்து கலகாட்டூர் கிராமத்தில் உள்ளது. நான் அந்த ஊரை சேர்ந்தவர் அல்ல. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. யாதவ சங்கம், வாதி தங்கம்மாள், 3ம் பிரதிவாதி ஜெயலட்சுமி ஆகியோர் சொத்துக்கள் ஒரே சர்வே எண்ணில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து காலிமனையாக உள்ளதா என்றால் தற்போது காலிமனையாக உள்ளது முன்பு பச்சையப்ப செட்டியார் அங்கு வீடு கட்டி குடியிருந்து வந்தார். ஜெயலட்சுமி அவருக்கு சொந்தமான 1440 சதுரடியில் தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை எந்த வருடம் கிரயம் வாங்கினேன் என்றால் 1996-ம் வருடம் கார்த்திகை மாதம் 1ம் தேதி கிரயம் வாங்கினேன். ஜெயலட்சுமி அம்மாள் ஏற்கனவே அசல் வழக்கு எண்.370/2001 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். ஜெயலட்சுமி தான் முதலில் என் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பதிலுரை மற்றும் எதிருரை தாக்கல் செய்திருக்கிறேன். நான் கிரயம் வாங்கிய பின்பு தான் பட்டா கொடுத்தார் என்றால் சரியல்ல பச்சையப்பன் பெயரிலேயே பட்டா இருந்தது அதற்கு பட்டா கொடுத்த பின்பு தான் நாங்கள் கிரயம் வாங்கினோம். பச்சையப்ப செட்டியாருக்கு 1983 சதுரடி உரிமையுள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் பட்டா உள்ளது அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன். பச்சையப்ப செட்டியாருக்கு 1983 சதுரடி உரிமையுள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் இந்த வழக்கிலோ, ஜெயலட்சுமி தாக்கல் செய்த அசல்

வழக்கு எண்.370/2001 வழக்கிலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெயலட்சுமி தாக்கல் செய்த அசல் வழக்கு 370/2001–ல் 3ம் பிரதிவாதியாக வாதி தங்கம்மாள் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கை நான் நடத்தவில்லை ராஜபிள்ளை தான் நடத்தினார். அந்த வழக்கு ஒருதலைபட்சமாக தீர்ப்பானதாக எனது வழக்கறிஞர் தெரிவித்தார். அந்த வழக்கு 1444 சதுரடி மட்டும் தான் எங்களுக்கு உரிமையுள்ளது என்றும், 1983 சதுரடி எங்களுக்கு உரிமையில்லை என்று தீர்ப்பானது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்தேனா என்றால் மேல்முறையீடு செய்தேன். அசல் வழக்கு எண்.370/2001–ஐ ஜெயலட்சுமி அம்மாள் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.